# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 23 ஞாயிறு 08.08.2021 மலர் - 2, இதழ் - 124


# மறக்க முடியுமா பலிதானிகளை . . . ?

கடந்த 08.08.1993 அன்று (அதுவும் இதே பொன்றதொரு ஞாயிற்றுக் கிழமைதான்) சென்னையில் உள்ள ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில், அல் உம்மா அமைப்பை சேர்ந்த முஸ்லிம் பயங்கரவாதிகளால் வைக்கப்பட்ட குண்டு வெடித்து சிதறியது. இதில் தேசத்திற்காகவும் ஹிந்துக்கள் ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட ராமசுப்ரமணியம், சேஷாத்திரி, குமரி பாலன், பிரேம் குமார், மேனகா, லலிதா, தேசிகன், ராமகிருஷ்ண ரெட்டி, காசிநாதன், ராஜேந்திரன், ரவீந்திரன் ஆகிய 11 ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயமுற்றனர்.

இதேபோல ஹிந்துக்களுக்காக களப்பணியாற்றிய ஒரே காரணத்திற்காக ஹிந்து அமைப்புகளை சேர்ந்த பலர் கடந்த காலங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

'ஹிந்து ஒற்றுமை, தேச ஒற்றுமை, பாரதம் உலகின் குருவாக மாற வேண்டும்' என்பதே அவர்கள் அனைவரது கனவாக இருந்தது. அதற்காக அவர்கள் வன்முறையிலோ பயங்கரவாதத்திலோ ஈடுபடவில்லை. அவர்கள் கையாண்ட ஒரே ஆயுதம் அன்பு மட்டும்தான்.

அவர்களது கனவினை நிறைவேற்ற இன்று நாம் உறுதி ஏற்போம். அதற்காக உழைப்போம்.

அவர்கள் அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்துவோம்.

ஜெய் ஹிந்த்!!!

